உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 29 | சௌமிய – சித்திரை – 10–5–70 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே, – சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## வெல்படை ஈந்த விறலோன்

'ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர் – ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று' என்பது பழைய சங்கப் புலவர் ஒருவர் கூறிய அறிவுரை. 'யாதொரு பொருளையும் பிறரிடம் சென்று, 'எமக்கு ஈக' என்று இரத்தல், ஏனை எல்லாவற்றினும் இழிந்த செயல். ஆயினும், அதற்கு உடன்பட்டு வந்து, 'ஈக' என்று ஒருவன் இரப்பானாயின், அவனால் இரக்கப்பட்ட பொருளை உடையவன், 'இல்லை' என்று மறுத்தல், அவ்விரத்தலினும் மிக இழிந்த செயலாகும்" என்பது அதன் பொருள்.

" ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில் "

என்று இரத்தலின் இழிவை விளக்கிக் காட்டுகின்றார் திருவள்ளுவர். அஃதாவது, 'மூப்புற்று மெலிந்த ஒரு பசு கோடையில் கடுவெயிலால் தண்ணீர் கிடையாமையால் சோர்ந்து கிடக்கும் நிலையைக்கண்ட அருள் உள்ளம்படைத்த ஒருவன் அதன் தாகத்தைத் தணிக்க வேண்டிப் பிறருடைய இல்லத்திற் சென்று பசுவின் நிலைமையைக் கூறி, 'சிறிது தண்ணீர் தாருங்கள்' என்று கேட்டாலுங்கூட, அவனது வாழ்க்கையில் அதுபோன்ற இழிந்தநிலை வேறொன்று இல்லை' என்பது அக்குறளின் பொருள்.

தண்ணீர் மிக எளிமையான பொருள்தான். விலை கொடுத்து வாங்கவேண்டுவது இல்லை. எத்துணைப் பஞ்சமாயினும் தண்ணீருக்குக் காசு கேட்பவர் எவரேனும் இருந்தால், அவர்களை மக்கள் இனத்தில் சேர்த்து எண்ணுதற்கில்லை. எனவே, தண்ணீர் எளிய பொருள்தான். அதனைக் கேட்பதை, 'இரத்தல்' என்று ஒருவரும் சொல்லமாட்டார்கள். அதிலும், தனக்காக அன்று அவன்கேட்பது; ஓர் எளிய பசுவின் உயிரைக் காப்பதற்காக. 'பசுவைப் பாதுகாத்தல் பெரிய அறச் செயல்' என்பது நம்நாட்டு மரபு. ஆகவே அச் செயலைச் செய்ய முயல்பவனை ஒருவரும் குறைகூற மாட்டார்கள் என்பது உறுதி. இருப்பினும், தான் செய்யக் கருதிய செயலைத் தன் முயற்சியைக்கொண்டே நிறைவேற்ற நினையாமல், பிறரிடம் இரந்து நிறைவேற்றிவிட எண்ணுவதைத் திருவள்ளுவர் வெறுக்கின்றார். தண்ணீரை இரந்து பசுவிற்கு ஊட்டி அதனை ஒருவன் பிழைக்கச் செய்வானாயின், பசுவைக் காப்பாற்றிய பேரறம் அவனுக்கு உண்டாதற்கு ஐயமில்லை. "ஆயினும், அதே சமையத்தில் அத் தண்ணீரைப் பிறரிடம் சென்று இரந்ததனால் உண்டான இழிவும் அவனுக்கு இல்லாமற்போய் விடாது' என்பது திருவள்ளுவர் கருத்து. இதனை, அவர் இவ்வளவு வலியுறுத்திக் கூறுதற்குக் காரணம், இச் சிறுபொருளை ஒருமுறை பிற உயிரின்பொருட்டு இரக்கச் சென்ற ஒருவன், பின்பு முதலில் சிறு பொருள்களையும், பின்னே பின்னே பெரிய பெரிய பொருள்களையும் பிறரிடம் இரக்கப் பழகிவிடுவான் என்பதே. அதனால், இவ் இரத்தல்

தொழிலை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்று கருது கின்றார் திருவள்ளுவர்.

" குன்றின் அனையாரும் குன்றுவர், குன்றுவ
குன்றி அனைய செயின் "

" ஈன்றாள் பசிகாண்பா னாயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை "

" தினைத்துணையாங் குற்றம் வரினும், பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார் "

என்றாற்போன்ற குறள்கள், 'குற்றத்தில், 'சிறியது, பெரியது' என்று வேறுபாடு என்ன இருக்கின்றது? குற்றம் என்றால், சிறியதாயினும் குற்றமே. அதனால், சிறிய குற்றத்தைச் செய்யலாம்; பெரிய குற்றத்தைச் செய்தல் கூடாது என்பதில்லை. சிறிய குற்றத்தைச் செய்தால் அது பொறுக்கத்தக்கது என்பது சிறியோரை நோக்கியேயன்றிப் பெரியோரை நோக்கியன்று. பெரியோர்க்குக் குற்றம் என்றால், எல்லாம் குற்றமே' என்னும் திருவள்ளுவரது உயரியகருத்தை நமக்குத் தெள்ளத் தெளியப் புலப்படுத்துவன. இம்முறையில்தான் பசுவின் பொருட்டு எளிய தண்ணீரை ஒருவன் பிறரிடம் சென்று இரப்பதையும் குற்றம் என்கின்றார் திருவள்ளுவர்.

" இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் "

என்னும் குறளில், 'இரத்தல் ஒருதொழிலன்று' என்பதைத் திருவள்ளுவர் மிக வன்மையாகக் கூறியுள்ளார். படைத்தற் கடவுள் உயிர்களை – சிறப்பாக மக்களை – படைக்கும்பொழுது, 'இவன் இன்ன தொழில் செய்து வாழ்க்கையை நடத்துக என வரையறுத்து விடுகின்றான்' என்பது நமது சமயக் கொள்கை. சோதிடம் சொல்பவர்களும் இவன் இன்ன தொழில் செய்து வாழ்தற்கு உரியவன் என்று சொல்வதைக் கேட்கலாம். ஆகவே, பல மக்களுக்கும் பல்வேறாக வாழ்க்கைத் தொழில்கள் அமைந்துள்ளமை தெளிவு. அத்தகைய தொழில்களுள், 'இரப்பது ஒரு வாழ்க்கைத் தொழில் அன்று' என்பதே மேற்காட்டிய குறளின் கருத்து. அஃதாவது,

'உலகைப் படைத்தவன் சிலருக்கு இரத்தலைத் தொழிலாகப் படைத்திருப்பானாயின், அவன் அழிந்தொழிக' என்பதன் கருத்து, 'படைத்தவன் வகுக்கும் வாழ்க்கைத் தொழில்களுள் இரத்தல் ஒரு தொழில் அன்று' என்பதே.

அங்ஙனமாயின், 'பொய்த்தல், வஞ்சித்தல், களவுசெய்தல் போன்றவை எல்லாம் தொழில்களோ' என்று வினவலாம். அவை தொழிலல்ல என்பது அனைவராலும் அறியப்பட்டமை, அவற்றைச் செய்தோர் அரசனது ஒறுப்பிற்கு ஆளாதலால் விளங்கிக்கிடக்கின்றது. அதனால், அவற்றை இவ்வாறு எடுத்துக்கூற வேண்டுவதில்லை. அன்றியும் பொய், வஞ்சனை முதலியவற்றை, 'எமது தொழில்' என்று ஒப்புக்கொள்பவர் உலகில் ஒருவரும் இல்லை. ஆனால், இரத்தல், தொழில்கள் பலவற்றில் ஒன்றுபோலக் கருதப்படுவதும், சிலர், 'ஒன்றும் இல்லையென்றால், இரந்து பிழைக்கிறேன்' என்று எளிதாகச் சொல்லிவிடுவதும், சொல்வதுமட்டுமன்று; செயலிலும் அவ்வாறே அதனை மேற்கொண்டுவிடுவதும் உலகில் காணப்படுதலால், இந்த ஒன்றைப்பற்றியே திருவள்ளுவர் இவ்வாறு கூறியுள்ளார்.

'இரத்தல்' என்ற ஒன்று குற்றமற்ற செயல் போலக் காட்சியளிக்கின்றது. ஆயினும் ஊன்றி நினைத்தால், அதனது கொடுமை விளங்கும். இரத்தல் தொழில் முதலில் அதனை மேற்கொள்பவனை மக்கள் இனத்திலிருந்து பிரித்து, இம்மை, மறுமை ஒன்றுக்கும் ஆகாத மாக்கள் நிலையை உடையவனாகச் செய்துவிடுகின்றது. சோம்பலை வளர்த்து நாட்டின் நலத்தையே கெடுத்துவிடுகின்றது. எனவே, ஒரு நாடு சீரும், சிறப்பும் உடையது என்றால், அங்கு இரப்போர் ஒருவரும் காணப்படாதிருத்தல்வேண்டும்.

"வண்மை இல்லையோர் வறுமை இன்மையால்" என்ற கம்பரது கற்பனையிலும், "கொடுப்பார்க்கு இரப்பார் இல்லாத குறையொன்றுளது கூறுங்கால்" என்ற சிவப்பிரகாசரது கற்பனையிலும் இரப்பவர் ஒருவராயினும் இல்லாத நாடுகளே காட்சியளிப்பதைக் காண்கின்றோம். உண்மையிலேயே அத்தகைய நாடு ஒன்று இருக்குமாயின், எத்துணை மகிழ்ச்சியாய் இருக்கும்!

இவ் இரத்தல் தொழில் உலகியலில் மட்டுமன்று; கடவுள் வழிபாட்டிலும் அன்றே நிகழ்கின்றது? அஃது எவ்வாறு எனின், கடவுளை அன்பு காரணமாக வழிபட்டு நிற்பதே சிறப்பு. அவ்வாறின்றிக் கடவுளிடத்தில், 'எனக்கு இது வேண்டும்; அதுவேண்டும்' என்று கேட்டு, அதற்காக வழி படுவதும் ஒருவகை இரத்தலேதான். பெரியோர்கள் அவ் வாறு செய்வதில்லை. அதனையே சேக்கிழார், "வீடும் வேண்டா விறல்" என்று குறிக்கின்றார்.

"ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்!
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்!

என்ற திருமூலர் வாக்கும், 'இறைவனை அணுகினாலும், அல்லது அவனால் ஆட்கொள்ளப்பட்டு அடியாராகிவிட்டாலும் அப்பொழுதுங்கூட, இது 'வேண்டும், அது வேண்டும்' என்று ஆசைப்படுதலோ, அதனை அவனிடம் கேட்பதோ கூடாது' என்றுதான் அறிவிக்கின்றது. "ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்" என்பதற்குச் சிலர், 'இறைவனைக்கூட விரும்புதல் கூடாது' என்று பொருள் கூறுகின்றார்கள். அஃது எவ்வளவு பொருத்தமற்றது என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஒரு பயனை விரும்பி இறைவனை வழிபடுதல் 'காமிய பூசை' என்றும், பயன் கருதாது அன்பு காரணமாக வழி படுதல், 'நிட்காமிய பூசை' என்றும் சொல்லப்படும்.

"இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் — சுடருருவில்
என்பருக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பறா தென்னெஞ் சவர்க்கு"

என்ற காரைக்காலம்மையாரது பாட்டு, நிட்காமியமான அவ ரது உண்மை அன்பை இனிது விளக்கும்.

"காமியம் செய்து காலம் கழியாதே"

என்று அப்பரும் அறிவுறுத்தல் காணலாம். ஆயினும் காமிய மின்றி வழிபடுவோர் உலகத்தில் அருமையினும் அருமை.

'காமியமாக இறைவனை வழிபடுதல் குற்றமோ' எனின், — குற்றமன்று; 'சிறப்பில்லை' என்பதேயாம். ஆயினும், ஒரு பயனை அடைய விருப்பம் தோன்றினால், அதனைப் பிற வழிகளில் அடைய முயல்வதை விட, இறைவனை வழிபட்டு அடைய விரும்புதல் எத்துணையோ மடங்கு சிறந்ததாகும். அதுபற்றியே அப்பரும்,

" அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ "

என்று அருளிச்செய்கின்றார்.

மேற்கூறியவாறு இரத்தலை மிக மிகக் கடிந்துரைக்கின்ற திருவள்ளுவர், அதனை ஒருபக்கம் உடன்படுவதையும் பார்க்கலாம். அப்பகுதி, 'இரவு' என்னும் அதிகாரமேயாகும். அதனுள்,

" இரக்க இரத்தக்கார்க் காணின்; கரப்பின்
அவர்பழி; தம்பழி யன்று "

" இரத்தலும் ஈதலே போலும், கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு "

என்னும் குறள்கள் காணத்தக்கன.

" கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும் "

என்னும் குறளால், 'யாரிடத்திலும் சென்று, எதனையும் இரவாது வாழ்தலே விரும்பத்தக்கது. அஃது இயலவில்லையாயின், எஞ்ஞான்றும், 'இல்லை' என்று சொல்ல அறியாது எதனையும் ஈயும் இயல்புடைய நல்லோரிடத்தில் சென்று இரக்க என்பது' முன்னர்க் கூறிய குறள்களின் கருத்தாகும். அதுபோலவே, இறைவனை நிட்காமியமாக வழிபடுதலே சிறந்தது. அஃது இயலாதபொழுது காமியமாக வழிபடல் விலக்கத்தக்கதன்று.

மேற்கொள்ளலாகாத இரத்தலை ஒருவன் மேற்கொண்டு இரக்கும்பொழுது, பொருளுடைய ஒருவன் 'இல்லை' என்று

சொல்லி மறுப்பானாயின், அவன் மக்களுள் ஒருவனாவனோ? அதுபோலவே, தம்மை வழிபடுவார்க்கு அவர் வேண்டிய பயனைத் தரமாட்டாத கடவுளரும் கடவுளராதல் இல்லை. 'சிவபெருமான் தன்னைக் காமியமாக வழிபடுவோர்க்கும் அவர் வேண்டுவது யாதாயினும் அதனைக் கொடுப்பவன்' என்பதை,

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்"

என்று விளக்குகின்றார் நாவுக்கரசர். 'அசுரர்களாயினும் வழிபாடு செய்தால் அவர்கள் வேண்டிய வரத்தை அவர்கட்குக் கொடுப்பவன் சிவபெருமான்' என்பதே எங்கும் சொல்லப்படுவது.

இரப்பவர்க்கு இல்லை என்னாது கொடுக்கும் வள்ளல்களில் அரிய பொருள்களைக் கொடுத்த வள்ளல்களது கொடைகள் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றன. சிபிச் சக்கரவர்த்தி ஒரு புருவிற்காகத் தனது உடம்பை அரிந்து கொடுத்தமை, குமணன் தனது தலையைக் கொடுக்க வாக்களித்தமை, கன்னன் தனது கவச குண்டலங்களையும், செய்த அறத்தையும் கொடுத்தமை முதலியவை அத்தகையன. அவைபோலச் சிவபெருமான் தன்னிடம் இருந்த பேராற்றல் வாய்ந்த சக்கரப் படையைப் பெறவேண்டி வழிபட்ட திருமாலுக்கு அதனை வழங்கிய வரலாறு பழமையாகச் சிறப்பித்துப் புராணங்களில் பேசப்படுகின்றது.

'சிவபெருமான் ஒருமுறை தன்முன் அகங்கரித்து நின்ற இந்திரன்மேல் சீற்றங் கொள்ளுதலும், இந்திரன் அஞ்சி வணங்கினான். அதனால் அச்சீற்றத்தை அப்பெருமான் கடலில் எறிய, அஃது ஓர் அசுரனாகி வளர்ந்தது. சலத்தால் தரிக்கப்பட்ட காரணம் பற்றி, 'சலந்தராசுரன்' என்பது அவனுக்குப் பெயராயிற்று. அவனைத் திருமால் முதலிய தேவருள் ஒருவரும் அழிக்க இயலாதவராயினர். அத்தேவர் அனைவரையும் வென்ற அவ்வசுரன், சிவபெருமான் மீதே போருக்குச் செல்ல, அவர் ஒரு முனிவர் வடிவத்துடன் தோன்றி, 'சிவன்மேல் போருக்கு' எழுந்த உனது வலிமையைச் சோதிக்க விரும்புகிறேன் என்று சொல்லித் தமது கால் விரலால் பூமியில் ஒரு சக்கரவடிவமாகக் கீறி, 'இதனைத்

தூக்க உன்னுல் இயலுமோ' என்ருர். உடனே அசுரன் அச் சக்கரத்தைப் பெயர்த்தெடுத்து மார்பிலும், தோளிலும் முயன்று தாங்கித் தலைமேல் வைத்துக்கொண்டபொழுது, அஃது அவன் தலையை அரிந்து தள்ளியது. தேவர் மகிழ்ந்து சக்கரத்தின் ஆற்றலை வியந்திருந்தனர். அந்தச் சக்கரத்தைப் பெற வேண்டும் என்று திருமால், சிவபிரானை நாள்தோறும் ஆயிரந் தாமரை மலர்கொண்டு ஆயிரம் திருப்பெயரைச்சொல்லி அருச்சனைசெய்து வந்தார். ஒருநாள் சிவபெருமான் ஒரு மலரை மறைத்துவிடத் திருமால் அருச்சனை தடைப்படாமல் தமது கண்ணையே பறித்துத் திருவடியில் தாமரை மலராக அருச்சித்தார். அதனுல் சிவபெருமான் மகிழ்ந்து சக்கரப் படையை அவருக்கு வழங்கியருளினுர்'.

'நிட்காமிய பூசை செய்தல் எளிது; காமிய பூசை கடினம்' என்பதையும் இவ்வரலாறு உணர்த்தும். பெருவலியுடைய வனை அழித்தற்பொருட்டு உண்டாக்கி அதனுல் வெற்றியும் பெற்ற சக்கரத்தைத் தம்மிடம்வந்து வேண்டினவர்க்கு மருது வழங்கிய வள்ளன்மையே இங்குப் பாராட்டப்படுவது. இவ் வரலாற்ருல், சிவபெருமானை முன்னேர் எவ்வாறு, 'வேண்டு வார் வேண்டுவதைத் தடையின்றிக் கொடுப்பவனுகக்' கருதி னர் என்பது தெளிவாகும். இது பற்றியே அப்பர் பெருமான் தமது தசபுராணத் திருப்பதிகத்துள் இவ்வரலாற்றை எடுத் தோதியருளினுர்

தடமலர் ஆயிரங்கள் குறைவொன்ற தாக
நிறைவென்று தன்க ணதனுல்
உடன்வழி பாடு செய்த திருமாலை எந்தை
பெருமான் உகந்து மிகவும்
சுடரடி யால்முயன்று சுழல்வித் தரக்கன்
இதயம் பிளந்த கொடுமை
அடல்வலி ஆழி ஆழி யவனுக் களித்த
அவனும் நமக்கொர் சரணே.

இதனுல் வெல்படை ஆக்கிய விறலேயன்றி அதனைத் தனக்கெனக் கொண்டு மறுக்காமல் பிறர்க்கு அளித்த விறலை யும் (வெற்றியையும்) உடையவன் சிவபெருமானுதலை உணர்ந்து, அவனையே சரணுக அடைந்து எந்நலமும்எய்து வோமாக.

குருவருள்

# அருள்நெறியும் அறநெறியும்

## தோத்திரமும் சாத்திரமும்

'தோத்திரம்' என்பதற்கு, 'புகழ்ச்சி' என்பது பொருள். புகழ்ச்சியை விரும்பாதவர் எவரும் இலர்; பிறரால் புகழப்படுதற்கேற்ற தன்மை ஒரு சிறிதும் தம்மிடம் இல்லாதவர்கள், கூடத் தங்களைத் தாங்களே புகழ்ந்துகொள்ளுதலைக் காண்கின்றோம். இன்னும் புகழுக்கு நேர்மாறான குணங்களை உடையவர்கள்கூட, அவைகளை மறைத்துத் தங்களைப் புகழுக்கு ஏதுவான குணங்களையே உடையவர்களாகச் சொல்லுதலைப் பார்க்கின்றோம். அஃதாவது, உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுகின்றவர்கள், 'உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றுமாகப் பேசுகின்ற வழக்கம் நம்மிடத்தில் கிடையாது' என்றும், சமையத்திற்குத் தக்கபடி முன்னுக்குப்பின் முரண்பட ஒருநிலையில்லாமல் பேசுகின்றவர்கள், 'சொல் என்ன ஒன்ரு, இரண்டா? முன்னொன்று பேசிப் பின்னொன்று சொல்லுகின்ற வழக்கம் நம்மிடத்தில் கிடையாது' என்றும், மற்றும் இவ்வாறான தன்மையில் தங்களைத் தாங்களே பெருமைப்படுத்திப் பேசிக்கொள்கின்றவர்களையும் உலகத்தில் காண்கின்றோம். இன்னும் சிலர் தங்களிடத்தில் இல்லாத பலவற்றை இருப்பதாகச் சொல்லிப் பிறர் தங்களைப் புகழ்வார்களானால், அவற்றைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்துவிடுவதும் உலக இயற்கையாய் உள்ளது. இவற்றால் எல்லாம் புகழ்ச்சியில் மக்களுக்கு எவ்வளவு விருப்பம் இருக்கின்றது என்பது தெளிவாகும்.

மக்களுக்கு இருக்கின்ற இவ்வியல்பினை இறைவன்மேல் ஏற்றிச் சிவப்பிரகாசர் என்னும் பெரியார், ஓரிடத்தில் நகைச்சுவை உண்டாகப்பாடுகின்றார்.

அஃதாவது, மாணிக்கவாசகர் சிவபெருமானைப் புகழ்ந்து சில பாடல்கள் பாடினர். ஆயினும், அவைகளை அவர் எழுதி

வைக்கவில்லை. எழுதி வைக்க முயற்சி செய்யவும் இல்லை. ஆகவே, அவைகள் அவரோடு மறைந்துவிட வேண்டியவை யாயின. இதனை அவர் வீடுபெறுங் காலம் வரையில் உற்று நோக்கிக்கொண்டிருந்த சிவபெருமானுக்குப் பிறர் ஒருவரும் அப்பாடல்களை எழுதிக்கொள்ளமாட்டார்கள் என்பது தெரிய வந்தது. தானே அவைகளை எழுதுவதற்கும் இயலாத ஒரு நிலைமை. அஃதாவது, சிவபெருமான் எந்தக் கல்வியும் கற்றதே இல்லை. அவனுடைய கைகளோ முறிபட்டவை, கண்கள், 'மூன்று இருக்கின்றன' என்று பெருமையாய்ச் சொல்லிக் கொள்வதைத் தவிர, மூன்றும் மூன்று வகை. ஒரு கண் காலை நேரத்தில் தெரியும்; மாலையில் தெரியாது. (இது சூரியனைக் குறிப்பது) மற்றொரு கண் மாலையில் தெரியும்; காலையில் தெரியாது. (இது சந்திரனைக் குறிப்பது.) மூன்றாவது கண்ணைத் திறக்கவே முடியாது. ஏனென்றால், திறந்தால் அது நெருப்பாய் எரியும். (இஃது அக்கினியைக் குறிப்பது.) இத்துணை இடையூறுகள் இருந்தும், தானே ஏடும், எழுத்தாணியுங் கொண்டு மாணிக்கவாசகரிடம் சென்று, அவர் பாடிய பாடல்களையெல்லாம் சொல்லும்படி கேட்டு, ஒன்று விடாமல் எப்படியோ எழுதினான். ஏனென்றால், ஒரு நாட்டின் அமைச்சர் தன்னைப் புகழ்ந்து பாடிய பாடல் என்றால், அவற்றை யாராவது வெறும்புகழ்ச்சி என்று சொல்வார்களா? ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு மாணிக்கம்போல அமைந்த பழுதில் செய்யுளாக அன்றோ அவை விளங்கும்? அதனால் தனக்கு எவ்வளவு புகழ் உண்டாகும்? இவற்றையெல்லாம் நன்கு நினைத்துப் பார்த்துத்தான் சிவபெருமான் மாணிக்க வாசகரது பாடல்களைத் தானே சென்று எழுதினான்; ஆகவே, 'அவன் புகழ்ச்சியில் பெரிதும் விருப்பம் உடையவன்' என்று தெரிகின்றது. ஆனால், அவனுக்கு உள்ளபடி உலகத்தில் இருப்பது இகழ்ச்சிதான். ஏனென்றால், அவனை யாவரும், 'எலும்பை அணிகின்றவன், சாம்பலைப் பூசுபவன், சுடு காட்டில் ஆடுபவன்' என்றெல்லாம் இகழ்ந்துதான் பேசுகின்றார்கள். அவனை எக்காரணத்தாலோ மாணிக்கவாசகர் புகழ்ந்து பாடிவிட்டார். அந்தப் பாடல்களை அவன் விடாமல் எழுதிக்கொண்டான்' என்று இவ்வாறு சிவப்பிரகாச அடிகள் திருவாசகத்தின் சிறப்பைத் தமது நால்வர் நான்மணிமாலையில் மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார். அப்பாடல் படித்து இன்புறுதற்குரியது;

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ,
மனம்நின் றுருக்கும் மதுர வாசக,
கலங்குறு புலன்நெறி விலங்குறு வீர,
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யேனும் உணரான்; அஃதான்று,
கைகளோ முறிபடுங் கைகள்; காணிற்
கண்களோ ஒன்று காலையிற் காணும்:
மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும்;
பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்;
ஆயினும், தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன்; அதனால்,
புகழ்ச்சி விருப்பன் போலும்,
இகழ்ச்சி அறியா என்பணி வானே.

இவற்றாலெல்லாம் இறைவன், புகழ்மாலையால் திருவுளம் மகிழ்ந்து பேரருள் செய்வான் என்பது விளங்கும். இவ்வுண்மையைச் சிவப்பிரகாசர் இலக்கியச் சுவைபட மேற்காட்டியவாறு, 'இறைவன் பிறரால் புகழப்படும் புகழ்ச்சியுரைக்கு ஆசைப்படுகின்றான்' என்பதுபோலக் கூறியிருப்பினும், உண்மையில் இறைவன் யாதொன்றையும் விரும்புபவனும் அல்லன்; வெறுப்பவனும் அல்லன். இதனையும் அவ்வடிகள் மேற்கூறிய பாடலில் நயம்படக் குறித்துள்ளார். அஃதாவது, "புகழ்ச்சி விருப்பன போலும் — இகழ்ச்சி அறியா என்பு அணிவானே" என்றார். மேற்கூறிய செய்கையால் சிவபிரான் புகழுக்கு ஆசைப்படுபவன்போலத் தோன்றினாலும், அவன் உண்மையில் இகழ்ச்சி என்பதே இல்லாதவன் எதைச் செய்யினும் அஃது அவனுக்குப் புகழ்ச்சியாகவே முடியும்; (இஃது அவன் எலும்பை அணிந்து சாம்பலைப் பூசித் தலையில் இரந்துண்ணினும், தேவர் பலரும் அவனையே சரண் அடைந்து வாழ்வு பெறுதலால் விளங்குவதாம்.) ஆதலால் அவன் பிறர் கூறும் புகழுக்கு ஆசைப்படக் காரணம் இல்லை' என்பது அதன் பொருள். ஆகவே, 'இறைவன் புகழை விரும்புகின்றான்' என்று சொல்வனவெல்லாம், அவனைப் புகழும் புகழுரைகள் யாவும், அவைகளைப் பாடுவோரது நெஞ்சைக் கனிவித்து அவன்பால் ஈடுபடச் செய்தல்பற்றி அவற்றை விரும்புகின்றான் என்னும் கருத்துப் பற்றிக் கூறுவனவேயாம்.

'பூசை' என்னும் வழிபாடும் இத்தன்மையதே. அஃதாவது,

" எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம்விரும்பும்
உண்மை யாவது பூசனை எனஉரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து "

என்ற பெரியபுராணப் பாடலில்; 'இறைவன் எதனையும் விரும்பாவிடினும் பூசையைமட்டும் விரும்புகின்றான்' என்பதை அவனிடமே கேட்டறிந்த அம்மை, அதுபற்றித் தானே அவனை ஆகம முறைப்படி பூசிக்க விரும்பினாள்' என்று கூறி யிருத்தலைக் காண்கின்றோம். அவ்வாறு இறைவன் பூசையை விரும்பி நிற்பதும், அது பூசை செய்வோரது உள்ளத்தை உருக்கி அவன்பால் ஈடுபடச் செய்கின்ற சிறந்த சாதனமாதல் பற்றியேயாம்.

இறைவனை வழிபடும் வழிபாட்டில் சிறந்த இருபகுதிகள், 'தோத்திரம், செபம்' என்பன. அவற்றுள் தோத்திரம் பிற இடங்களில் சென்று அலைந்து அல்லலுறும் மனத்தை ஒரு வழிப் படுத்தி இறைவன்பாற் செலுத்தி, அவனது அருளியல் பில் ஈடுபட்டுக் கண்ணீரும், கம்பலையுமாய்ப் பத்திப்பரவசத்தில் ஆழ்ந்திடச் செய்வது. செபம், இறைவன் வேறு, நாம் வேறு என்ற நிலை இல்லாமல் அவனோடு ஒற்றித்து நின்று அவனது இன்பத்தில் திளைக்கச் செய்வது. எனவே, முதற்கண் இன்றியமையாது வேண்டப்படுவது தோத்திரமாகின்றது. இத் தோத்திரம் உரையாக இல்லாமல் பாட்டாய் இருத்தலே சிறந்தது. ஏனெனில், பாட்டிலே ஓர் இனிய ஓசை அமைந்து இன்புறுத்துகின்றது. இனி அப்பாட்டும் இசைத்தமிழாக இருப்பின் மிகவும் சிறப்புடையதாகும். ஏனெனில், இயற் றமிழ்ப் பாடலைக் காட்டிலும் இசைத்தமிழ்ப் பாடல்களே சிறந்த பண்பொருந்திய பாடல்களாய் உள்ளத்தை உருக்குவன. "பன்மாலைத் திரள்இருக்கப் பாமாலைக்கே பட்சம் பரமற்கு" என்று தாயுமானவர் பொதுப்படக் கூறினார். ஆயினும், ஞானசம்பந்தர்,

" கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி "

என்றும்,

" பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன் "

என்றும் இசைத் தமிழையே சிறப்பாக எடுத்தருளிச்செய்தார். இன்னும் அவர்,

" ஆதி யந்த மாயினும் ஆல வாயில் அண்ணலே,
சோதி யந்த மாயினும் சோதி யுள்ளொர் சோதியாய்,
கீதம் வந்த வாய்மையாற் கிளர்தருக்கி னோர்க்கலால்
ஓதி வந்த வாய்மையால் உணர்ந்துரைக்க லாகுமே "

என, 'இசைத் தமிழாற் பாடிப் பரவுகின்றவர்களே இறைவனை உணர்தல் கூடும்' என்று அறுதியிட்டு அருளினர். அப்பர் பெருமானும்,

" அளப்பில கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளு மாறே "

என்றும்,

" சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்;
தமிழோடு இசைபாடல் மறந்தறியேன் "

என்றும் அருளுவதைப் பார்க்கின்றோம். வேதமும் பல பகுதிகளாய் அமைந்திருப்பினும், அவற்றுள் தோத்திரங்களாய் அமைந்துள்ள பகுதிகளே, 'வேதம்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்றன. அவற்றுள்ளும், சாம வேதம் இசையோடு பாடப்படுதலால், அதுவே இறைவனுக்கு மிகவும் உகப்பானது என்று சொல்லப்படுகின்றது. இவற்றாலெல்லாம் தோத்திரங்களாய் உள்ள பாடல்களது — சிறப்பாக இசைப் பாட்டுக்களது — சிறப்பு இனிது விளங்குவதாம்.

இறைவனைப் பற்றிய புகழ்ப்பாடல்கள், பழைய காலத்தில், கடவுள் வாழ்த்து' என்று சொல்லப்பட்டன என்பதைத்

தொல்காப்பிய நூலால் அறிகின்றோம். கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இயற்றமிழாயும், இசைத்தமிழாயும் அமைந்திருந் தமையும், அவற்றுள் ஒருசில, 'தேவபாணி' என வழங்கப் பட்டமையும் அறியப்படுகின்றன. பரிபாடலுட் சிலவும் கடவுள் வாழ்த்துப் பாடல்களே.

இங்ஙனம் பண்டைக் காலத்தில் பலவகைத் தோத்திரப் பாடல்கள் இருந்தன எனினும், கால மாறுபாட்டால் அவை மிகுதியாகக் கிடையாது மறைந்த நிலையில், இறைவனுக்குச் சிறந்த தோத்திரப் பாடற் கருவூலங்களாக அவனது அரு ளாலே உலகிற்குக் கிடைத்த அளவற்ற திருப்பாடல்கள் தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைப் பாடல்களே. இவற்றுள் மேற்கூறிய சிறப்பையுடைய இசைத்தமிழாய் இருத்தல்பற்றித் தேவாரங்கள் பிற திருமுறை அனைத்திற்கும் முன் வைக்கப்பட்டன.

இனி இயற்றமிழ்ப் பாட்டாயினும், இசைத்தமிழ்ப் பாட் டாயினும் பொருளுணர்ந்து பாடும்பொழுதே முழுப்பயன் தருவனவாகும். இது, "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் - செல்வர் சிவபுரத்தின் உள்ளார்" என்ற திருவாசகத்தால் நன்கறியப்படும்.

பொருள் உணர்தல் என்பது சொற்பொருள் உணர்தல் மட்டும் அன்று; சொல்லப்பட்ட கருத்துக்களை நன்கு விளங்கிக் கொள்ளுதலுமாகும். இறைவனது தோத்திரப் பாடல்களை அவ்வாறு உணர்ந்து பாடும்பொழுதுதான் உணர்ச்சி மீதூரப் பத்திப்பரவசம் தோன்றுவதாகும். சங்க இலக்கியங்களைத் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களை உணர்ந்து படிக்கும் பொழுதுதான் சுவைக்க முடியும். அதுபோலவே, திருமுறை களைச் சைவ சாத்திரங்களை உணர்ந்து ஓதும்பொழுதான் பொருள் முற்றாக விளங்கி நிறைந்த பத்திப் பெருக்கு உண்டாவதாகும். ஆகவே, 'தோத்திரம், சாத்திரம்' என் னும் இருவகை நூல்களும் சைவத்திற்கு இரு கண்களாக விளங்குவனவாம். அவை இறைவனது அருட்பெருக்கினால் சமயாசாரிய சந்தானசாரியர்களது அருள்வாக்காக அமைந் திருத்தலால் அவை இறைவன் திருமேனியாகவே விளங்கி வழிபாட்டிற்குரியனவாய் விளங்குகின்றன. உலகெலாமாகி

நிற்கின்ற இறைவன் தோத்திர சாத்திரங்களில் சிறப்பாக விளங்கி நிற்கின்ருன் என்பதைத் திருநாவுக்கரசர்,

"தோத்திரமும் சாத்திரமும் ஆனுர் தாமே"
(திருமுறை - 6.78.5.)

என்று அருளிச்செய்தார். பொதுவாக நோக்கும்பொழுது வேதம் தோத்திரமும், ஆகமம் சாத்திரமும் ஆகும். அவை போன்ற நூல்கள் தமிழ் மொழியிலும் முன்னமே உண்டு. மாணிக்கவாசகர் மூவருக்கு முற்பட்டவர் என்பது மரபாதலால், திருவாசகம் அப்பருக்கு முன்பே உள்ளது. திருமூலரது திருமந்திரம் ஆகமமாதலின் அதனை, 'சாத்திரம்' என்றல் பொருந்துவதே. எனவே, அப்பர் காலத்திற்குமுன்பே வட மொழி தென்மொழிகளில் தோத்திரமும், சாத்திரமும் நிரம்ப இருந்தமை தெளிவு. எனினும், இக்காலத்தில் இறைவனது திருவருளால் இனிது விளங்கிநிற்கும் சிறப்புத் தோத்திரம் திருமுறைகளும், சிறப்புச் சாத்திரம் உந்தி, களிறு முதலிய பதினுன்குமாம் இவற்றின் பெருமையை. "வேதம் பசு; அதன்பால் மெய் ஆகமம்; நால்வர் – ஓதும் தமிழ் அதனின் உள்ளுறுநெய் – போதமிகும் – நெய்யின் உறுசுவை யாம் நீள்வெண்ணெ மெய்கண்டான் – செய்ததமிழ் நூலின் திறம்" என்னும் பழைய வெண்பா நன்கு விளக்குகின்றது. எனவே, தேவார திருவாசகம் முதலிய திருமுறைகளாகிய நெய்யில் உந்தி, களிறு முதலிய சாத்திரங்களாகிய சுவையை நுகர்ந்து உலகம் இன்புறுவதாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

**Dharmapuram Adhinam**

Arunajateswaraswami Devasthanam, Tiruppanandal.

திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் கோவிலைப் பார்க்கும் பாக்கியம் எனக்கு இன்று கிடைத்தது. எல்லாத் துறைகளிலும் இந்தக்கோவில் என் சிந்தையைக் கவர்ந்தது. கோவில் மிகப் புனிதமாக வைக்கப்பட்டிருக்கிறது. பூஜைகள் எல்லாம் காலா காலத்தில் முறை வழுவாது நடக்கின்றது. இந்தக் கோவில் பிறகோவில்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

(Sd.) தீ. மூ. நாராயணசாமி பிள்ளை,

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakateswaraswamy Devasthanam, Tirucadayur

I visited this shrine this evening. The temple is kept in a very good condition and it proves the usage cleanlines is next to Godlines. I had the good fortune of having Dharsan at this shrine this evening and I am thankful to the authorities of this temple.

(Sd.) R. Sadasivam,

13—4—70. Judge, High Court, Madras.


Today on the Tamil New Years Day, I had the good fortune of visiting this ancient and a sacred temple with my family and some relatives. Most unexpectedly, I had the unique opportunity of worshipping the Almighty on the occasion of this Tirukalyanam. The temple is kept in such a good condition, neat and decorated in spite of the huge crowd attending the festival. The staff of the temple are realy so nice to the devotees that their attitude is much conducive to the worshipping public. Lastly I must add that the Kattalai Thambiran deserves all thanks for his kindness and interest in instructing the worshippers about the history and legends of the temple and the presiding deity. When we left the temple we were satisfied that we had received something from the Almighty.

(Sd.) Kuppannan,

14—4—70. District & Sessions Judge,

Nagapattinam.


சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் :
திருமுலைப்பால் விழா



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
திருஞானசம்பந்தருக்கு நிவேதனம்செய்ய பால்வழங்கல்.




ஸ்ரீ திருஞானசம்பந்தர்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
தமிழகக் கல்வி அமைச்சர் நாவலர்,
மாண்புமிகு. திரு இரா. நெடுஞ்செழியன் M. A., அவர்களுக்குப்
பொன்னுடை போர்த்தியருளியது

தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளிக் கால்கோள் விழா



தமிழக அரசு கல்வி அமைச்சர்,
நாவலர், மாண்புமிகு. திரு. இரா. நெடுஞ்செழியன் M. A., அவர்களும்
திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி,
ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய
சுவாமிகள் அவர்களும் (குன்றக்குடி அடிகளார் M. L. C.)

# திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

**திரு. ஜி. வரதராசப் பிள்ளை B. A.,**

( மலர் 29, இதழ் 5, பக்கம் 292 இன் தொடர்ச்சி )

53 அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே.

குறிப்புரை :- இருபத்தெண்கோடி நூறாயிரம் என்பது ஆகமத்திலுள்ள கிரந்தங்களின் எண்ணிக்கை. விழுப்பம் - பெருமை.

விண்ணவர் ஆகமங்களின் துணையால் ஈசனது பெருமையை உரைத்தனர் என்பதாம். 2

59 பண்டித ராவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறுங் கருத்தறி வார்என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் * அறஞ்சொன்ன வாறே.

குறிப்புரை :- கண்டவர் - தெரிந்தவர். பதினெட்டுப் பாடையும் தெரிந்த பண்டிதர் அவை கூறும் உண்மையினை அறிவர் என்க. அண்ட முதலான் - சிவன். அறம் சொன்ன வாறு - அறத்தினைக் கூறியபடி.

பதினெட்டுப் பாடையிலும் சிவன் சொன்ன அறமேயுள்ளது என்பதாம். 3

---

* பாட பேதம் : 1. அரன் சொன்ன.

60 அண்ணால் அருளால் அருளுந்திவ் யாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரி
தெண்ணில் எழுபது கோடிநூ றாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே.

குறிப்புரை :- திவ்யாகமம் - தெய்வத்தன்மை பொருந்திய ஆகமம். விளங்கரிது - விளங்குவதற்கு அருமையானது. எண்ணிலும் - அறிந்தாலும்.

நீர்மேல் எழுத்து அழிந்து பயன்படாது போவதுபோல அனுபவமின்றி அறிந்தால் பயனில்லை என்பதாம். 4

61 பரனைப் பராபரங் காட்டி உலகில்
தரனைச் சிவதன்மந் தானேசொல் காலத்
தரனை அமரர்கள் அர்ச்சிக்கு நந்தி
உரனுகி ஆகமம் ஓங்கிநின் றானே.

குறிப்புரை :- பரன் - மேலானவன். பராபரம் - பரஞானம் அபரஞானம். தரன் - தாங்குபவன். உரன் - அறிவு.

பரனாகிப் பரஞானம் அபரஞானம் காட்டி நந்தியெம்பெருமான் அறிவாய் ஆகமத்தில் விளங்குகின்றான் என்பதாம். 5

62 சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமமெங்கள் நந்திபெற் றானே.

குறிப்புரை :- உவ - மனத்துக்கு உவந்த, தவ மால் - தவத்தைச் செய்த மால். பிரமீசர் - பிரமன். நவ ஆகமம் - ஒன்பது ஆகமம். இவற்றின் விரிவை அடுத்த பாடலில் காண்க.

சிவமாகிய மேலான பொருளிலிருந்து சத்தி முதல் பிரமன் ஈறாகப்பெற்ற சிவாகமங்கள் ஒன்பதையும் நந்தி பெற்றான் என்பதாம். 6

63 பெற்றநல் ஆகமங் காரணங் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே.

குறிப்புரை :- சிந்தம் - சிந்தியம். துற்ற - நெருக்கத்தைச் செய்கின்ற.

பெற்ற ஆகமங்கள் காரணம் முதலாக மகுடம் ஈறாக ஒன்பது என்பதாம். 7

64 அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே.

குறிப்புரை :- அண்ணல் அறைந்த அறிவு - இறைஞானம். எண்ணிலி கோடி - அளவற்ற. நீர்மேல் எழுத்தாவது அழியுந் தன்மையது என்க.

சிவாகமத்தை நிரம்ப ஓதினும் உண்மையை உணராவிடில் பயனற்றதாம் என்றவாறு. 8

65 மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய முந்தமி ழும்உட னேசொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே.

குறிப்புரை :- மாரி - கார்கூதிர் ஆகிய மழைக்காலம். கோடை - இளவேனில் முதுவேனில் ஆகிய கோடைக்காலம். பனி - முன்பனி பின்பனி ஆகிய பனிக்காலம். தூங்க நின்று - லயப்பட்டு நின்று. இளைக்கின்ற காலம் - வறட்சியடைந்திருக்கும் காலம்; ஆறு பருவங்களும் ஒடுங்கிய ஊழிக்காலம் என்க. உடனே சொல்லி - ஏககாலத்தில் உபதேசித்து. காரிகையார் - பராசத்தியார்.

சிருட்டி தொடங்குமுன் பராசத்திக்கு வடமொழி, தென் மொழிப் பொருளாயுள்ள பிரணவத்தை உபதேசித்தான் என்பதாம்.

66 அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே.

குறிப்புரை :- அவிழ்த்தல் - கட்டை நெகிழ்த்தல். கட்டுதல் - பந்தித்தல். சிமிட்டலைப் படுதல் - கண்ணிமைத்தல் ஒழிதல். ஆமே - ஆகாது.

பந்தமும் வீடும் அருளுகின்ற சிவனை ஆகம அறிவினால் அறியமுடியாது என்பதாம். 10

## 4. குருபாரம் பரியம்

67 நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே.

குறிப்புரை :- நந்தி - சிவன். நந்திகள் நால்வர் - சனகர், சனந்தனர், சனதனர், சனற்குமாரர். குருவும் சிவனும் ஒன்றே யாதலின், குருவையும் நந்தி என்றே குறிப்பிட்டபடி என்க.

சனகாதி நால்வர் முதல் திருமூலர் உள்ளிட்டே குரு எட்டு பேர்கள் என்பதாம். 1

68 நந்தி அருளாலே நாதனும் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினேம்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே.

குறிப்புரை :- நந்தி - குரு. மூலன் - மூலாதாரச் சக்கரத்தில் விளங்கும் உருத்திரன். என் செயும் - எல்லாம் செய்ய வல்லவன். நந்தி வழிகாட்ட - நந்தியின் துணைகொண்டு மூலாதாரச் சக்கரத்திலிருந்து உச்சிச் சக்கரத்துக்குச் செல்லும் சுழிமுனை வழியைக் காட்ட. நான் இருந்தேன் - நான் நிலைபெற்றிருந்தேன்.

நந்தி அருளாலே மூலப்பொருளை உணர்ந்து நிலைபெற்றிருந்தேன் என்றவாறு. 2

69 மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
டிந்த எழுவரும் என்வழி யாமே.

குறிப்புரை :- வழிமுறை - சீடர் முறை. கந்து உரு - கட்டுத் தறிபோன்று அசைவற்றிருந்த உரு.

மாலாங்கன் முதலாகச் சொல்லப்பட்ட எழுவரும் இவரது மாணுக்கர் என்பதாம்.

(தொடரும்)

# வீரசோழியம்

டாக்டர் செ. வை. சண்முகம் M. A., M. Litt.

(மலர் 29. இதழ் 5, பக்கம் 298 இன் தொடர்ச்சி)

4. 3. சொல்லதிகாரம் :

4. 3. 1. பால்காட்டும் விகுதிகள் :

பெயர்ச்சொல்லில் வரும் பால்காட்டும் விகுதிகளைப் பற்றித் தத்திதப் படலத்தில் குறிப்பிடுகிறார். அவற்றுள் கள், மன் போன்ற விகுதிகள் பழந்தமிழில் காணப்படவில்லை[1]

கள் — சிறுக்கண்
மன் — கருமன்
குறுமன்

இவ்வாறே பெண்பாலுக்குரிய பல விகுதிகளைக் குறிப்பிட்டுள்ளார்.

மி — சிறுமி (சிலம்பு 17-28-2)
ஆட்டி — வெள்ளாட்டி
ஆத்தி — வண்ணாத்தி
சி — பறைச்சி[2] முதலியவை

இடைக்காலத்தில் வழங்கும் விகுதிகளாகும். தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் பால்காட்டும் விகுதிகள் தனியே எடுத்துக் கூறப்படவில்லை.

---

[1] Dr. S. V. Shanmugam, Gender suffixes in Dravidian (forthcoming)

[2] சி என்பது தி என்பதன் திரிந்த வடிவமே ஆகும். தி என்பது இகர ஐகார ஈற்றுச்சொல் முன் வரும்போது சிகரமாக மாறுகிறது. ஆய்த்தி - ஆய்ச்சி (கலி 106-31; சிலம்பு 415.206)

**4. 3. 2 சிறப்பு ஒருமை :**

ஒரு பொருளைச் சிறப்பிக்கக் கருதும்போது பன்மைக்குரிய விகுதியை ஒருமைக்குப் பயன்படுத்துதலே சிறப்பு ஒருமை (Hanarific Singnlar) என்று அழைக்கப்படுகிறது. இதில் பலர் பால் போல ஆண்பால் பெண்பால் வேறுபாடு இல்லை. ஆண் பால் பெண்பால் போன்று ஒருமை எண்ணையே பெயரடையாக ஏற்றுவரினும் பால்வேறுபாடு இல்லாதது. இவ்விரு காரணத் தினால்தான் தனிப்பெயராக சிறப்பு ஒருமை பேசப்படுகிறது.

தொல்காப்பியர் காலத்தில் சிறப்பு ஒருமை உண்டு. ஆனால் இலக்கியவழக்கில் பயன்படுத்தப்படவில்லை. எனினும் இயற் சொல் (Personal nouns)லில் மட்டும் சிறப்பு ஒருமை இலக்கிய வழக்கிலும் இருந்துள்ளது. இச்செய்திகளைக் கீழ்காணும் இரு நூற்பாவாலும் அறிய முடிகின்றது.

> ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
> ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
> வழக்கினாகிய உயர் சொற்கிளவி
> இலக்கண மருங்கின் சொல்லாறல்ல
>
> கிளவியாக்கம் 27.

> இயற்பெயர் முன்னர் ஆரைக்கிளவி
> பலர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே.
>
> இடையியல் 22.

பழந்தமிழ் இலக்கியத்தில், சான்றாக குறுந்தொகையில்[3] சிறப்பு ஒருமை பயன்படுத்தப்படுவதால் தொல்காப்பியர் காலத் திற்குப் பின் அது இலக்கிய வழக்கிலும் ஏறிவிட்டது எனக் கூறலாம்.

| | | குறுந்தொகை |
|---|---|---|
| சிறப்பு ஒருமை வினைமுற்று: | இகழ்ந்தனர் | 43.2 |
| சிறப்பு ஒருமை வினையாலணையும் பெயர் | நல்கினர் | 369.4 |
| | இறந்தவர் | 329.4 |
| | ஆடைப்பார் | 82.2 |
| சிறப்பு ஒருமை சுட்டுப் படர்க்கைப்பெயர் | அவர் | 11.8 |
| ,, தன்மைப் பெயர் | யாம் | 209.3 |

[3]N. Kumaraswamy Raja 'A Phisological Study of Kuruntokai' (Unpublished thesis submitted to the Annamalai University)

முதலியன. எனவேதான் புத்தரமித்திரனர் பெயரிலும் (நூற்பா 30) இடப்பெயரிலும் (நூற்பா 37) வினையில் பால் காட்டும் விகுதியிலும் (71, 72) ஏவலிலும் (79) சிறப்பு ஒருமையைக் குறிப்பிட்டுள்ளார். ஆனல், ஆண்பால் சிறப்பு ஒருமை, பெண்பால் சிறப்பு ஒருமை அஃறிணை சிறப்பு ஒருமை என்று பெயரில் மூவகை சிறப்பு ஒருமை பேசுகிறர். இம்மூன்றும் ஆர் என்ற விகுதியை ஏற்பதாலும் சிறப்பு ஒருமை என்ற ஒரு பிரிவே போதுமானது. மூவகை வேண்டியதல்லை.

### 4. 3. 3. பன்மை விகுதி :

தொல்காப்பியர் பன்மை உணர்த்தும் கள் விகுதி அஃறிணைக்கு மட்டுமே வரும் என்றும் அதுவும் அவ்வளவு இன்றியமையாதது இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

> கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
> கொள்வழி உடைய பல அறி சொற்கே.

பரிபாடல், குறள், சிலம்பு, மணிமேகலை ஆகியவற்றிலும் ஒரிரு இடங்களில் கள் விகுதி உயர்திணைப் பெயர்களோடும் இடப்பெயர்களோடும் (personal pronouns) பயன்படுத்தப் பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வாளிகள் | பரிபாடல் | 9-54 |
| எயினர்கள் | சிலம்பு | 12-20-2 |
| மற்றையவர்கள் | குறள் | 263 |
| சிறுமியர்கள் | சிலம்பு | 17-28-2 |
| யாங்கள் | சிலம்பு | 11-161 |
| தங்கள் | சிலம்பு | 23-175 |

பல்லவர் கால இலக்கியங்களில் கள் விகுதி உயர்திணையிலும் பயன்படுத்துவது பெரு வழக்காகிவிட்டதால் வீரசோழிய ஆசிரியர் பெயர்ச்சொல்லின் வரும் பலர்பால் விகுதிகளாக அர்கள் ஆர்கள் என்பனவற்றையும் (நூற்பா 30) இடப் பன்மை விகுதிகளாகக் கள்ளையும் (நூற்பா 37) கூறியுள்ளார்.

தொல்காப்பியர் பெயரில் பலர்பாலுக்குரிய விகுதியாக மார் என்ற விகுதியைக் குறிப்பிடவில்லை. ஆயினும் புறநானூறு அகநானூறு போன்றவற்றில் மார் விகுதி பயின்று வந்து பிற்கால இலக்கியத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஐமார் 'சகோதரர்கள்' புறம் 342-15
தோழிமார் அகம் 48-5

என புத்திரமித்திரனார் மார் விகுதியைப் பெயரில்வரும் விகுதியாக (நூற்பா 30)வும் குறிப்பிட்டுள்ளார்.

### 4. 3. 4. இடப்பெயர் வடிவம் :

தன்மை ஒருமையாக நான், முன்னிலைப்பன்மையாக நீர்கள், முன்னிலையில் வேற்றுமை ஏற்கும் வடிவமாக உன், உம் ஆகிய வற்றைக் கூறியிருப்பது தொல்காப்பியத்திலிருந்து மாறுபட்ட வடிவங்களே. நான் என்பது பரிபாடலிலும் (6-87) மணிமேகலையிலும் (17-45) வந்துள்ளமையும் 'உன்' என்பது அகநானூற்றிலும் (222-2) 'உம்' என்பது நற்றிணையிலும் (368-3) வந்துள்ளமையும் அறியத்தக்கன.

4-3-5 ஏழாம் வேற்றுமை உருபுகளாகக் கூறப்பட்ட பக்கல், உளி ஆகியவை பழந்தமிழில் காணப்படவில்லை. எனவே இடைக்காலமொழியில் பயனபடுத்தப்பட்ட புதிய உருபுகளாகும்.

4-3-6 ஆறும் வேற்றுமை உருபாக இன் என்ற ஒரு விகுதியும் குறிப்பிடுகிறார் (35) இதில் இன என்பது சாரியை.

அகரமே வேற்றுமை உருபு. தொல்காப்பியர்,

ஆறாகுவதே
அதுவெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி (563)

என்று அது என்ற ஒரு உருபை மட்டும் குறிப்பிட்டிருப்பது அனைவரும அறிந்ததே.

தின்ன கண்ணி புறம் 45-3
மரத்த கோடு குறுந் 99 4

ஆகிய சங்க இலக்கியங்களிலும் அகரம் ஆறும் வேற்றுமை உருபாகப் பயின்று வந்துள்ளது.[1]

---

[1]Dr. S. V. Shunmugam, 'Case system in Dravidian' (paper presented in the Seminar on Dravidian Linknistics, Annamalai University, Annamalainagar 1969.)

# அகப்பேய்ச் சித்தர் அருந்தமிழ்

செஞ்சொற்கொண்டல், புலவர்,

**திரு. சொ. சிங்காரவேலன்** M. A., Dip.Ling.

## அகப்பேய் – அகப்பை :

உள்ளத்தை அடக்கி வாழ்தல் பெரிதும் அரிதான செயலாகும். 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிதுகாண்' என்று தாயுமானவர் கூறிச்சென்றனர். ஓடிக்கொண்டே யிருக்கும் உள்ளத்தை அடக்கி ஒருநிலைப்படுத்துவதே நல்லோர் செய்தற்குரிய நற்செயல் ஆகும். மனத்தைப் பேய், குரங்கு முதலிய கொடுஞ்சொற்களால் அருளாளர் கூறுவது இங்கே அறிதற்குரியது. மனத்தை நிலைப்படுத்துவிட்டால் வேறு பேறும் வேண்டுமோ ? சித்தர்களில் உள்ளத்தைப் பேயாக்கிப் பாடியவர்க்கு 'அகப்பேய்ச் சித்தர்' எனும் பெயரைத் தமிழ் உலகம் வழங்கியுள்ளது. அகப்பேய்ச் சித்தர் என்ற பெயர் காலப்போக்கில் 'அகப்பைச்சித்தர்' என்று மருவி வழங்கிவரலாயிற்று. உள்ளத்தை நோக்கி உரைப்பதாக, நெஞ்சுக்கு அறிவுறுப்பதாக இவ்வருளாளர் பாடிய பாட்டுக்கள் தொண்ணூறு ஆகும். இவற்றுள், எளியபோக்கில் அரும்பொருள் ததும்பி இவர் உரைக்கும் ஆழ்ந்த உண்மைகள் பல.

## தத்துவ விளக்கம் :

"இறைவன் திருவடியை அடைந்திட வேண்டுமாயின் நஞ்சு உண்ண வேண்டா. நெஞ்சு மலையாமல் நீ ஒன்றும் சொல்லாமல் இருந்தபடி இருந்தாலே போதும்" என்ற பொருளுடைய பின் வரும் பாடலோடு தொடங்குகின்றது. இவர் பாடல் :–

"நஞ்சுண்ண வேண்டாவே — அகப்பேய் !
நாயகன் தாள் பெறவே !
நெஞ்சு மலையாதே — அகப்பேய் !
நீ ஒன்றும் சொல்லாதே !"

எல்லாவற்றிற்கும் மேலான பரம்பொருள் (பராபரம்) கடல், உலகம் அனைத்தையும் படைத்தது (2) என்று உலக உற்பத்தியை உரைக்கின்றார் இச் சித்தர். இதன்பிறகு தத்துவ விளக்கங்கள் கிராமத்துப் பாடல் இசையிலேயே ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன. ஒவ்வொருவரியின் பின்னும் 'அகப்பேய்' என்பது விளிக்குஞ் சொல்லாக வந்து இவரது பெயர்க் காரணத்தைக் காட்டுகின்றது.

மந்திர விளக்கம் :

ஐம்பெரும் பூதங்கள் தோற்றம், அவற்றிற்கு நிறம் ஆகியவற்றை விரிவாக உரைக்கின்றார் சித்தர். அதன்பின் மந்திர விளக்கமாக இம்மாமுனிவர் உரைக்கும் பகுதிகள் இவை :—

" அகாரம் இத்தனையும் — அகப்பேய்!
அங்கென் றெழுந்ததடி!
உகாரங் கூடியடி — அகப்பேய்!
உருவாகி வந்ததடி!" (14)

" மகார மாயையடி — அகப்பேய்!
பலமது சொன்னேனே
சிகார மூலமடி — அகப்பேய்!
சிந்தித்துக் கொள்வாயே!" (15)

சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றை விலக்கி ஞானத்தை வற்புறுத்துகிறார் இவர்.

" தேக ஞானமடி — அகப்பேய்!
தேடாது சொன்னேனே" (26)

இந்த உடலை 'ஐந்தலை நாகம்' என்று கூறி இதனைப் பெறும் 'ஆதாயம்' கொஞ்சம் என்று எடுத்துரைத்து, இதன் விடத்தைத் தீர்க்கும் வீரன் இறைவன் ஒருவனே என்று முடிக்கின்றார் ;

" ஐந்தலை நாகமடி — அகப்பேய்!
ஆதாயம் கொஞ்சமடி!
இந்த விடந்தீர்க்கும் — அகப்பேய்!
எம் இறை கண்டாயே" (27)

**அநுபவ விளக்கம் :**

கடவுளநுபவம் பெற்ற களிப்பிலே கவிதை பெருக்கெடுக்கின்றது. " கண்டுகொண்டேனே — காதல்விண்டேனே ; " என்று (29) தொடங்குகின்ருர். இறையநுபவம் பெற்றபின் சாத்திர சூத்திர சங்கற்பங்கள் அனைத்தும் வீணே என்று விதந்துரைக்கின்ருர். (33) பின் என்னதான் வழி? சித்தரைக் கேட்கலாம்; அவர் கூறுவார் :—

" சும்மா இருந்துவிடாய் — அகப்பேய் !
சூத்திரம் சொன்னேனே
சும்மா இருந்தவிடம் — அகப்பேய்
சுட்டது கண்டாயே " (38)

அருணகிரிநாதர், " சும்மா இரு சொல்லற என்றலுமே, அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே " என்று அநுபூதியிற் கூறி உருகும் பகுதியும், " சும்மா இருவெனநீ சொல்லப் பொருள ஒன்றும், அம்மா அறிந்திலனென்றன்றுரைத்த — பெம்மான் " அருணகிரி பெற்ற அநுபவத்தை எனக்கும் காட்டு என்று போரூர் சுவாமிகள் கனியும் பகுதிகளும் நினைக்கத் தக்கன.

**சீவன் முத்தி :**

இதே பாட்டைப் பின்னே பாடுகிருர் சித்தர்.

" சும்மா இருந்தவிடம் — அகப்பேய் !
சுட்டது சொன்னேனே ;
எம்மாயம் இதறியேன் — அகப்பேய் !
என்னையும் காணேனே " (45)

இறைவனேடு கலந்த சீவன்முத்தர் நிலையிலே சித்தர் இருந்தார் என்பது, ' என்னையும் காணேன் " என்பதனுல் விளங்குகின்றது. " எம்பிரான் ஆட்ட ஆடி என்னைப் பின்னைத் தன்னுளே கரக்கும் " என்பார் அப்பரடிகள்.

" என்னபடித்தாலும் எம்முரையாகாது ; சொன்னது கேட்டாயே சும்மா இருந்துவிடு " (49) என்று பின்னும் இவ்வாறே அறிவுறுத்துகின்ருர். பரத்தில் சென்ருலும் பாரிலே

மீளும்; பரத்துக்கு அடுத்த இடமோ பாழான இடம் (51) அங்குச் சென்றால் "குஞ்சித பாதம்அடி; குருபாதம் கண்டாயே" (52).

திருவடி வழிபாடு :

இத்தகைய குஞ்சிதபாதத்தைக் கும்பிட்டு ஞானப் பயன் கொள்வார்க்கு உலகத்துத்துன்பங்கள் ஒன்றும் செய்யமாட்டா.

"தேனூறு பாயுமடி — அகப்பேய்!
திருவடி கண்டவர்க்கே!
ஊனூலும் இல்லையடி — அகப்பேய்
ஒன்றையும் நாடாதே" (58)

என்பது இச்சித்தர்வாக்கு. தானாகி நின்ற இத்தகு அருளாளர்கட்குச் "சாதி பேதம் இல்லை; ஓதி உணர்ந்தாலும் ஒன்றுமே இல்லையடி" (68) என்கின்றார் அடுத்து.

ஆத்ம விசாரணை :

"தன்னை அறிய வேணும் — அகப்பேய்!
சாராமற் சார வேணும்
பின்னை அறிவதெல்லாம் — அகப்பேய்!
பேயறிவாகுமடி!" (78)

'ஆத்ம விசாரணை' என்று கூறப்பெறும் 'தன் ஆராய்ச்சி' வேண்டும். அப்போதேயே இறை நிலை, உயிர் நிலை, உலக நிலை ஆகிய மூன்றையும் பற்றிய தெளிவு உண்டாகும். இது பற்றிய அறிவே இல்லாமல் வேறு ஏதேதோ எண்ணத்தில் வாழ்வதெல்லாம் பேயறிவு பெற்று வாழ்தலே ஆகும்' என்று கருதுகின்றார் சித்தர்.

சின்மயச் சித்தர் :

ஆன்மா அல்லது உயிர் முத்திநிலையும் நீரும் உப்பும் கலந்ததுபோலக் கலந்திருக்கும் என்பது இவர் கூறும் கருத்து :—

" அப்புடன் உப்பெனவே — அகப்பேய் !
ஆராய்ந்து இருப்பாயே " (81)

உன்னைக் கோலஞ்செய்துகொண்டு அலைவதிலும், ஒருவரோடொருவர் வீண்வம்புரையாடிக் கழிவதிலும், விளையாட்டாகப் போவதிலும், நிலையின்றி வாழ்தலிலும் ஈடுபடாமை வேண்டும். (80).

கடவுள் மயமாக மாறிய சீவன்முத்தர் இயல்பை இச்சித்தர் பாடுகின்றார். இவர்கள் 'சின்மயம்' ஆனவர்கள். ஆதலின், வீடு வேண்டா என வெறுப்பர்; தீட்சை வேண்டா என விலக்குவர் (82).

இவ்வாறு அரிய உண்மைகளை நாடோடி நடையிலே மக்கள் மன்றத்தில் தெளிவுறவைத்த அகப்பேய்ச் சித்தர் அமுதப் பாடல்களும், பக்தி இலக்கியத் துறையிலே, ஒரு முக்கியமான காலக் கட்டத்தை அறிதற்குப் பெருந்துணை புரிகின்றன.

---

# விசேஷ நாட்கள்

## 14—5—70 முதல் 13—6—70 முடிய

| | |
|---|---|
| 18—5—70 | பிரதோஷம் |
| 25—5—70 | திருஞானசம்பந்தர் திருநக்ஷத்திரம் |
| ,, | திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் திருநக்ஷத்திரம் |
| ,, | முருக நாயனார் திருநக்ஷத்திரம் |
| ,, | திருநீலநக்க நாயனார் திருநக்ஷத்திரம் |
| 1—6—70 | பிரதோஷம் |
| 2—6—70 | கழற்சிங்க நாயனார் திருநக்ஷத்திரம் |
| 3—6—70 | வேலூர் மண்டலாபிஷேக கிருத்திகை |
| 7—6—70 | நம்பியாண்டார்நம்பிகள் நாயனார் திருநக்ஷத்திரம் |
| 8—6—70 | சேக்கிழார் நாயனார் திருநக்ஷத்திரம் |
| ,, | நமிநந்தியடிகள் நாயனார் திருநக்ஷத்திரம் |
| ,, | சோமாசிமாற நாயனார் திருநக்ஷத்திரம் |

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

## வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 29, இதழ் 5, பக்கம் 274ன் தொடர்ச்சி)

## 29. மாயப் பசுவை வதைத்தது

வேதநெறியின் புறத்தொழுகும் புல்லர்கள் விடுத்த பாம்பினைப் பரமனருளால் கௌரியன் துணித்த பரிசு கண்டோம். இனி அப்பாதகர்கள் விட்ட மாயப் பசுவை விடை கொண்டு மாய்த்த விந்தை காண்போம்.

**பாவத்தழலில் வந்த பசு :-**

படத்தோடும் பிளந்த வாயோடும் வந்த பாந்தளை அனந்தகுணன் வதைத்த பிறகு அதன்பின்னே வந்த சமண குண்டர்கள் கடிய காற்றால் மோதுண்ட மேகத்திரளையொத்து பின்காட்டியோடிப் பதுங்கினர். உடைந்துபோன உலுத்தர்கள் ஓரிடத்தில் ஒன்றாகி 'நாம் முன்பு விடுத்த யானையைப் பாண்டியன் கொன்றான். இப்போது நாகத்தையும் வதைத்து விட்டான். இனி நாம் எப்படிப் பாண்டியனை வதைப்பது' — என்று சூழ்ந்தார்கள். கடைசியில் அருமையான வழியொன்று கண்டு ஆனந்த முற்றார்கள். ஆபிசார வேள்வியை மீண்டும் செய்து பசுவை வரவழைப்போம். பசுவைத் துன்புறுத்த பாண்டிய நாட் டார் முன்வரார். அம் மாயப் பசு பாண்டியனையும் அவனது நாட்டையும் அழித்துவிடும் என்று துணிந்து அவம்படு வேள்வியை வளர்த்து ஆவை எழுப்பினர்.

**கூடலை அழிக்க வந்த கொடுமை :-**

இறைவன் உண்டு என்றும் உடனே இல்லையென்றும் சொல்லக்கூடிய அத்தி — நாத்தி மந்திரங்கற்ற அமணர் உரைப்படி பசு பாண்டிநாட்டை அழிக்கப் பாய்ந்து வருகிறது.

அப்பசுவின் மூச்சுக் காற்றில் சராசரப் பொருள்கள் எல்லாம் புயலில் பூளைப்பூ பறப்பதைப்போலப் பறக்கின்றன. எதிர்ப் பட்ட புள்ளும் விலங்கும் அலறிக்கொண்டு திசைகெட்டோட மலைகளையும் காடுகளையும் கொம்பினால் குத்திப் பெயர்ப்பது போலக் கோபாவேசத்துடன் வருகிறது. மறலியோ என வரும் மாயப் பசுவினைக் கண்ட மக்கள் மன்னனிடம் முறையிட அவனே முக்கண்ணனைச் சரண்புகுந்தான்.

### விடை விடுத்த வித்தகன் :-

நர்தனே — மாறி நடமிடும் பாதனே. உயிர்களுக்கு அறிவுதரும் போதனே — பூரண புராண வேதனே இப் பொழுது வரும் இப்புதுத் தொல்லைக்கு நான் யாதுசெய்வேன். இது முறையோ — எம்மைக் காத்தளிக்கையன்றோ நின்கடன் என்று மீனவன் முறையிட சோமசுந்தரப்பெருமான் அருள் சுரந்து நந்தியெம்பிரானை விளித்து நீ போய் அமணர் ஏவலால் வரும் மாயப் பசுவை வென்று வா — என்று விடுத்தார்.

இடபம் மிக்க எழிலோடு வருகிறது. கோட்டுப் பிறை கால் குளிர்வெண் கதிர்க்கற்றை போலச் சூட்டுக் கவரித் தொடைத் தொங்கலு நெற்றி முன்னுப்பூட்டுத் தரள முகவட் டும் பொலியப் பின்னல் மாட்டுச் சதங்கைத் தொடைகல்லென வாய்விட்டார்ப்பப் பெருமிதத்தோடு ஏறு வந்த காட்சியை வருணிப்பார் பரஞ்சோதியார். பிறைத் திங்களையொத்த கொம்பினால் சூல்கொண்ட மேகங்கீறித் துள்ளிஎழும் வெள்ளி மலை கால்பெற்று நடந்தாற்போல நடந்தது விடை. பசுவைக் கண்டது. காற்றெனச் சீறித் துரத்தியது. விண்ணுக்கும் மண்ணுக்குமாகப் புரட்டி யெறிந்தது. மலை உச்சியிலும் கடலடியிலுமாகத் தூக்கியெறிந்தது. திசையெங்கிலும் ஓடி யிளைத்த பசு அக்காளையின் அழகில் மயங்கியது. மன்மதனின் மலரம்பால் தாக்குண்டு வாடி அங்கேயே விழுந்து உயிரை விட்டது. அவ்விடம் பசுமலையாம்.

### இன்னல் தீர்ந்தது :-

இறைவனருளால் இடபம் பசுவை வதைத்த காட்சியை மக்கள் கண்டு மகிழ்ந்தனர். தோல்விகண்ட அமணர்கள்

நாணம் மேலிடத் திரும்பியோடினர். இடபம் உலகினர் காணச் சான்ருகி நின்றது. (இடபமலே) பின் சூக்கும சரீரத்தோடு இறைவனிடம் சென்று பணிமுடித்த பெருமிதத்தோடு பணிந்து நின்றது. பிறைமுடித்த தயாளனும் நீ முன்னே நிலேயிலிரு என்றருள் புரிந்தான்.

**இராமன் வழிபட்ட தலம் :**

இராமபிரான் இலங்கைக்குச் செல்லும் வழியில் இவ்விடப மலேமேல் தங்கியதும், அங்குவந்த அகத்தியர் மதுரையின் பெருமையை அவருக்கு அறிவித்து வழிபடச் சொன்னுர். இராமனும் முறைப்படிப் பொற்ருமரையில்நீராடிசொக்கலிங்கப் பெருமானே வழிபட்டார். மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றுள் ஏதாவது ஒன்றிஞல் மற்றைய தலங்கள் சிறப்புறும். மதுரையோ இம்மூன்ருலும் சிறந்தது. இப்பதியைச் சார்ந்தவர் இருவினேயும் நீங்கி மங்கல போகம் பெறுவர்.

ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் அசரீரியாக இலங்கையில் பிராட்டி இருப்பதனே உணர்த்தியதோடு இராவணவதம் முடிந்து வெற்றியும் பெறுவாய் என்று இராமனுக்கு ஆசி தந்தார். அதனுல்தான் இராமன் இலங்கை வெற்றிக்குப் பிறகு இராமேஸ்வரத்தில் சிவனேத் தாபித்துப் பூசைசெய்து வழிபட்டார் என்று உணர்கிருேம்.

இந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் ஆதிகாரணமான சோம சுந்தரப் பெருமானேச் சிறக்க வழிபட்ட அனந்தகுணன் பின்பு குலபூடணனேப் பெற்ருன். சிறிது காலம் சென்றபின் ஆட்சியை அவனிடம் ஒப்படைத்துவிட்டுச் சிவபுரம் அடைந்து இன்புற்ருன்.

(வளரும்).

# செய்திகள்

தருமையாதீனத்தில் :

## சதயத்திருநாள் விழா

திருநாவுக்கரசு சுவாமிகளின் திருநக்ஷத்திரமாகிய சதய நக்ஷத்திர திருநாள் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் ஞானபீடம் ஏறிய இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவு நாளாகவும் அமைந்தது. சதயத் திருநாளில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அதிகாலையிலேயே தமது ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி வழிபாடாற்றி ஸ்ரீ ஞானபுரீசர், ஸ்ரீ ஞானம்பிகை, ஸ்ரீ அஷ்டாதச புஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை முதலிய மூர்த்திகளுக்கும் சிறப்பு வழிபாடுகள் செய்வித்து வழிபாடாற்றினர்கள்.

பின்னர் தருமையாதீனத் திருக்கோயில் முதலிய திருக்கோயில் பிரசாதங்கள் பார்க்கப்பட்டன. ஆதீன மடம், ஆதீன தேவஸ்தானம், இவற்றில் பணிபுரிகின்றவர்களும், ஆதீனம் கல்லூரி உயர்பள்ளி தொடக்கப்பள்ளி முதலிய கல்வி நிலையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானத்தை வழிபட்டுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர்.

குன்றக்குடி திருவண்ணமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி அருணசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் எழுந்தருளி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களுக்குப் பொன்னுடை போர்த்தி, ஆட்சியின் சிறப்பை விளக்கும் அடையாளமாக வெள்ளியினலாகிய செங்கோல் அளித்து மகிழ்ந்தார்கள்.

சிதம்பரம் டாக்டர், திரு. K. அரங்கசாமிப் பிள்ளை, முதலிய வெளியூர்ப் பிரமுகர்களும், மாயூரம் பெருமக்களும் தருமையாதீனத்திற்கு வந்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் இருபத்தைந்தாம் ஆட்சி ஆண்டின் நிறைவை அறிவிக்கும் வகையில் இருபத்தைந்து தட்டுகளில் பழம் முதலிய பொருள்களை வைத்து எடுத்துவந்து திருமுன்னர் வைத்து வழிபட்டார்கள்.

பின்னர் வாழ்த்துரைக் கூட்டம் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் ஆட்சிச்சிறப்பை குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பாராட்டிக்கூறி அன்பர்கள்பலருக்கும் வாழ்த்துக்கூறியருளினார்கள். அடுத்து சிதம்பரம் டாக்டர். திரு. K அரங்கசாமிப் பிள்ளை அவர்களும், காட்டூர் திரு. இராமையா முதலியார் அவர்களும், பாராட்டிப் பேசினார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அனைவர்க்கும் ஆசி வழங்கியருளியபின் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றிநவின்றபின் வாழ்த்துரைக் கூட்டம் நிறைவுற்றது. அன்று ஆதீனத் திருமடத்திற்கு வந்திருந்த பெருமக்கள் பலரும் மாகேஸ்வர பூஜையில் கலந்துகொண்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் ஆசிபெற்றுச் சென்றார்கள்.

இருபத்தைந்தாம் ஆண்டின் நிறைவை முன்னிட்டு ஆதீனத் திருமடத்தில் பணிபுரியும் எல்லோருக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் புத்தாடைகள் வழங்கியருளினார்கள்.

## உயர்நிலைப்பள்ளிக் கால்கோள்விழா

தருமையாதீனத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயர் தாங்கிப் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது இவ் உயர்நிலைப்பள்ளி. இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் பலர் பள்ளி இறுதித்தேர்வில் வெற்றிபெற்று மேல் நிலையடைந்துள்ளனர். இப்பள்ளி தற்பொழுது கூரைக் கட்டிடத்தில் நடைபெறுகிறது. இப்பள்ளிக்கு ஒரு சிறந்த கட்டிடம் கட்டவேண்டும் என்பது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களது திருவுள்ளம். திருவுள்ளக்குறிப்பின்வண்ணம் மாயூரம் தரங்கம்பாடி சாலையில் பார்வையான இடத்தில் கட்டிடம் அமைப்பதென்பது முடிவாயிற்று.

19—4—70 ஞாயிற்றுக்கிழமை காலை 11-30 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளிப் புதுக்கட்டிடத்திற்குத் தமிழ்நாடு தெய்வீகப் பேரவைத் தலைவர், மேல்சபை உறுப்பினர் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் மகாசந்நிதானம ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் (குன்றக்குடி அடிகளார் M. L. C.) தலைமையில், தமிழ்நாடு அரசு கல்வித்துறை அமைச்சர் நாவலர், மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள் கால்கோள் செய்தார்கள்.

[ தொடர்ச்சி 346 ஆம் பக்கம் பார்க்க ]

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்,

திரு. K. முத்துஜோதிடர்

( சாதாரண ஸு வைகாசி மீ 1உ முதல் 31உ முடிய )

( 15—5—70 முதல் 14—6—70 முடிய )

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். மனம் நிம்மதி இல்லாமலும், அதிக செலவுகளும், குடும்பத்தொல்லை களும் இருந்துகொண்டு இருக்கும். ஆனாலும் தெய்வ பலம் முன்னின்றுகொண்டு சகல துன்பங்களையும் சயிக்கும். சுப சோபனாதிகள் மூலம் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத் தரும். தீராத வியாதி தீரும். தீராத கடனும் நீங்கும். தொழில் ஓங்கும். சிநேகிதர்கள் உறவினர்களுடைய கல்யாண வைப வங்களால் அடிக்கடி பிரயாணங்கள் ஏற்பட்டுக்கொண்டு இருக்கும். மேலோர் பெரியோர்களின் ஆசிகள் கிடைக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். புதியதாக தொழில் விருத்தியும், அநேக நண்பர்களின் சேர்க்கையும், படிப்பில் மேன்மையும், கீர்த்திப் பத்திரமும் கிடைக்கும். உத்தியோகலாபமும் கிடைக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்,

4. கடகம் – புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலன்களைத்தரும். விவாகங்கள் முதலிய சுபபலன்கள் ஏற்படும். நினைத்த காரியங்கள் எல்லாம் சாத்தியமாகும். குடும்பம் ரொம்பவும் ஒற்றுமையாக இருந்துகொண்டு இருக்கும். எதிர்பாராத பொருள் உதவிகள் கிடைக்கும். தெய்வ பலம் முன்னின்று காக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$.

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலனைத்தரும். உத்தியோகத்தில் உயர் பதவியும், இல்லற சுகமும், அதிகமான பொறுப்பும், மேலோர்களின் அன்பும், கீர்த்திப் பத்திரமும் கிடைக்கும். அதிகமாக வேலை தொந்திரவும், அலைச்சல்களும் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$.

கன்னியாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத்தரும். விசேஷ வைபவங்களும், சுபங்களும் அடிக்கடி சஞ்சார பலனைக் கொடுக்கும். புதியதாகத் தொழில் ஏற்படும். வியவகாரத்தில் ஜயமும், வெற்றியும் உண்டாகும். பலவிதத்திலும் செலவுகள் அதிகமாகவே இருந்துகொண்டு இருக்கும். எல்லாக் காரியங்களும் கைகூடும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் சுபபலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். புதியதாகத் தெய்வீகக் காரியங்களால் பலவிதமான நன்மைகள் ஏற்படும். எதிர்பாராத லாபங்களும், கீர்த்திப் பத்திரங்களும் கிடைக்கும். தெய்வபக்தியும், பிராம்மண பக்தியும் அதிகமாகும். எப்பொழுதும் நல்ல காரியங்களே நடக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு

இருக்கும். உடும்பத்தில் அடிக்கடி தொந்திரவு ஏற்படும். ஆனாலும் மேலோர்களால் மேன்மையும், ஆரோக்கியமும் உண்டாகும். வெள்ளி, சனி சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$.

தனுர்ராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே தரும். நஷ்டமான பொருள்கள் வந்துசேரும். தொழில் ஓங்கும். குடும்பம் விருத்தியாகும். புத்திரர்களாலும், சிநேகிதர்களாலும் நன்மை உண்டாகும், வரவு செலவு சமமாக இருந்து கொண்டு இருக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்,

10, மகரம் – உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் பூரணமாக சுப பலனைத் தரும். வியாதி நீங்கும். தெய்வபலம் முன்னிற்கும். உத்தியோகத்தில் புதிதான முறையில் லாபம் உண்டாகும். அடிக்கடி சஞ்சாரங்கள் இருந்துகொண்டேயிருக்கும்: மேலோர் பெரியோர்களாலும், நண்பர்களாலும் எப்பொழுதும் நன்மையே உண்டாகும். குடும்பம் தழைத்து ஓங்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் – பூரட்டாதி $\frac{3}{4}$,

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனைத்தரும். உழைப்பு அதிகமாக இருக்கும். எப்பொழுதும் சுபகாரியங்களும், தெய்வீகமான காரியங்களும் நடந்துகொண்டேயிருக்கும். அடிக்கடி உறவினர்கள், சிநேகிதர்கள் சேர்க்கையும் உண்டாகும். புத்திரர்களாலும், சிநேகிதர்களாலும் சுபம் உண்டாகும். வியாதி நீங்கி ஆரோக்கியம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுப பலனைத் தரும். எப்பொழுதும் தெய்வசிந்தனையும், விசேஷமாக தர்ம காரியங்கள் செய்வதும் உண்டாகும். அடிக்கடி நண்பர்கள்மூலம்

சஞ்சாரமும், புதியதாகத் தொழில் உண்டாவதும், புத்திரர்கள் சிநேகிதர்கள் இவர்களால் நன்மையும் உண்டாகும். தெய்வ பலம் முன்னின்று காக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

குறிப்பு ;— மேற்படி வைகாசிமாதம் சங்கிரமணம் சித்திரைமாதம் 31 ஆந் தேதி வியாழக்கிழமை உதயாதி 32 – 49 நாழிகைக்கு சங்கிரமணம் விருஷபராசி பிரவேசம். ஸ்ரீ லோகரக்ஷகரான சூரியபகவான் பிரவேசம் செய்கிற பலத்தால் ஸமஸ்த மங்களமும் உண்டாகும். வருஷாரம்பத்தில் ஏற்பட்ட சிற்சில தோஷங்களாலும், மூன்றுவித உத்பாதங்களாலும் நமது பாரத பூமியும், அன்னியநாடுகளும் ரொம்ப மேலான தூரத்துக்குப்போய்க்கொண்டிருப்பதால் சீக்கிரத்தில் பக்தர்கள் ஆஸ்தீகர்கள் எல்லோரும் ஸ்ரீ பகவானைப் பூமியில் அவதரித்து உலகத்தை ரக்ஷிக்க பிரார்த்திக்கவேணும்.

---

[ 342ம் பக்கத் தொடர்ச்சி ]

கால்கோள் விழாக்கூட்டம் இறைவணக்கத்துடன் தொடங்கியது வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் விழாத்தலைவர் அவர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும். விழாவிற்கு வருகைபுரிந்த அன்பர்களையும் வரவேற்று விழாத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார் எம். எல். சி. அவர்கட்கும், புதுக் கட்டிடக் கால்கோள் செய்ய வருகைபுரிந்த அமைச்சர் அவர்களுக்கும் வரவேற்பிதழ்கள் வாசித்தளித்து, பொன்னாடை போர்த்து மலர்மாலை அணிவித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தால் செய்யப்பெறுகின்ற அறச் செயல்களைப் பாராட்டி, கல்விப் பணியின் சிறப்பைக் கூறி ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயர் தாங்கி விளங்கும் இவ் உயர்பள்ளி சிறந்தோங்கி விளங்கும் என்றும் இப்பள்ளியில் பயிலும் மாணவர்களும் பணிபுரியும் ஆசிரியர்களும் புண்ணியம் செய்தவர்கள் என்றும் கூறி வாழ்த்தினர்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்நாட்டின் கல்வியின் நிலை, கல்வியின் இன்றியமையாமை முதலியவற்றைக் கூறி ஆதீனத்தில் செய்யப்பெறுகின்ற மருத்துவப்பணி, கல்விப்பணி முதலியவை காலத்துக்கேற்ற சிறந்த பணி என்றும் காலத்துக்கேற்ற நாட்டுக்குத் தேவையான அறச் செயல்களைப்புரியும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களைச் சிறப்பித்துப் போற்றி கட்டிடம் நன்முறையில் கட்டப்பெற்று, பள்ளி சீரிய முறையில் நிகழ தன் நல்வாழ்த்தைத் தெரிவித்தார்கள். நன்றியுரை நாட்டு வாழ்த்துக்களுடன் கூட்டம் இனிது நிறைவுற்றது.